Registered as a Newspaper in Ceylon ★★ விலை சதம் 10

# ஈழநாடு

THE EELA NADU

தேசிய தினசரி National Tamil Daily

மலர் 8 (31-5-66) இதழ் 113

பராபவ வைகாசி 18 ஸபர் 10 செவ்வாய்க்கிழமை

## மணிக்கு 1600 மைல் விமானம்

மாஸ்கோ, மே 30

161 பிரயாணிகளை, ஏற்றிச் செல்லும் ரஷ்ய சூபர்ஸோனிக் விமானம் விரைவில் பறக்க ஆரம்பிக்கும்.

மணிக்கு 1600 மைல் வேகத்தில் செல்லும் இந்த விமானம், பூமியில் இறங்காமல் தொடர்ச்சியாக 4000 மைல்கள் பறக்கும்.

65000 அடி உயரத்தில் செல்லும் இந்த விமானப், டி. யு. 144 ரகத்தைச் சேர்ந்தது.

950 பிரயாணிகள் செல்லக் கூடியதும் பல மாடிகளைக் கொண்டதுமான உலகிலேயே பெரிய விமானத்தை ரஷ்யா இப்போது உற்பத்தி செய்து வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

# யாழ். மாநகரசபைக்கு மூவர் விசேஷ கமிஷன்

## நிர்வாகத்தை ஏற்று நடத்த நியமனம்

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகரசபையின் நிர்வாகப் பொறுப்பை ஏற்று நடத்துவதற்காக மூன்று பேரைக்கொண்ட ஒரு விசேஷக் கமிஷனை நியமிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் சிபார்சு செய்துள்ளார். மாநகரசபைசரித்திரத்தில் மூவர் கொண்ட விசேஷ கமிஷன் நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவை.

இந்தக் கமிஷனில் ஸ்தலஸ்தாபன கமிஷனர் திரு டபிள்யு. எஸ். பெர்ணுண்டோ, யாழ்ப்பாணம் ஸ்தலஸ்தாபன உதவி கமிஷனர் திரு. எஸ். சி. மாணிக்கவாசகர், பொது வேலைப்பகுதி பகுதி நிர்வாக எஞ்சினியர் திரு. என். நடேசன் ஆகியவர்களை நியமிக்கும்படி மந்திரி கேட்டுள்ளார்.

இம்மூவரையும் யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகத்தை நடத்தும் விசேஷக்கமிஷனர்களாக நியமித்து கவர்னர் ஜெனரல் விசேஷ வர்த்தமானி மூலம் அறிவித்தபின்னர் அவர்கள். மாநகர சபையின் நிர்வாகத்தைக் கையேற்பார்கள்

இந்த வர்த்தமானி இன்று இரவு வெளியிடப்படும் என்று எதிர்பார்க்கப்பட்டது

தற்போது மாநகர சபை ஆணையாளராக விருக்கும் திரு. ஹட்சன் செல்வராசா தொடர்ந்து அப்பதவியிலேயே இருப்பார்.

யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிர்வாகம் பற்றி ஸ்தலஸ்தாபனக் கமிஷனர் திரு டபிள்யு எஸ் பெர்ணுண்டோ கடந்த வாரம் திடீரென விசாரணையொன்று நடத்தினர். இந்த விசாரணையில் மாநகரசபை நிர்வாகத்தில் திறமையின்மையும் ஊழல்களும் நிலவுவதாக அவர்கண்டுபிடித்து அரசாங்கத்துக்கு அறிவித்திருந்தார். அதைத்தொடர்ந்து மாநாகர சபை கலைக்கப்பட்டது

யாழ் மாநகர சபையின் அடுத்த தேர்தல் நடைபெறும்வரை, இம்மூவர் கொண்ட விசேஷக் கமிஷனே யாழ்ப்பாணம் மாநகரசபை நிர்வாகத்தைத் தொடர்ந்து நடத்தும்.

## காஞ்சீபுர, மணிபுரி சேலைகிடைக்குமா?

### பதுக்கிவிட்ட பொருளுக்கு ஏன் விலைக் கட்டுப்பாடு?

யாழ்ப்பாணம், திங்கள்

ரூ. 400 முதல் 500 வரை விற்பனைசெய்யப்படும் காஞ்சிபுரம், மணிப்புரி சேலைகள் ஜூன் மாதம் முதல் ரூபா 19/50க்கு கிடைக்குமென்ற செய்தி இங்கு நகைப்பை ஏற்படுத்தியிருக்கிறது.

ஜவுளி விலைக்கட்டுப்பாட்டுத் திட்டத்தில் இந்தச் சேலைகள் உள்ளடக்கப்பட்டதனல் நிலைமையில் எவ்வித மாற்றமும் இல்லையென விஷயமறிந்த வட்டாரங்கள் கூறின.

ஏற்கனவே இச்சேலைகளின் இறக்குமதி தடை செய்யப்பட்டிருப்பதால் இவை கள்ளச்சந்தையில் ஏற்கனவே பதுங்கிவிட்டனவென்றும் அரசாங்கத்தின் புதிய முடிவு இதனல் எவ்வகையிலும் பாதிக்கப்படமாட்டாதென்றும் அவ்வட்டாரங்கள் மேலும் கூறின.

எப்போதும்போல் இந்த ரகச் சேலைகள் உயர்விலைக்கு விற்பனையாவதைத் தடுப்பதில் தற்போதைய அரசாங்க நடவடிக்கை வெற்றி பெறமுடியாதெனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

இறக்குமதித்தடை விதிக்கப்பட்டதும் அதேசமயம் பதுக்கல் மூலம் கள்ளச்சந்தையில் விற்கும் ஒரு பொருளின்மீது தடைச்சட்டம் போடப்படுவதினுல் எவ்விதப் பலனும் இல்லையென அவை மேலும் கூறின.

### அரிசி மான்ய விவகாரத்தில்

## எதிர்க்கட்சி ஆதரவைத் திரட்டும் முயற்சி

### முக்கியஸ்தர் பலர் ஈடுபட்டுள்ளனர்

கொழும்பு, திங்கள்

அரிசி மான்யப் பிரச்னையில் தேசிய அரசாங்கத்துக்கு ஆதரவளிக்குமாறு எதிர்க்கட்சிகள் கோரப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது. முக்கியஸ்தர்கள் பலர் இப் பிரச்னையில் அரசாங்கத்துக்கு உதவியளிக்குமாறு எதிர்க்கட்சிகளைக் கேட்டுள்ளதாக அரசியல் வட்டாரங்களில் கூறப்படுகிறது.

நாட்டு நலன்கருதி இப் பிரச்னைபற்றி சகல கட்சி மகாநாடு ஒன்றைக் கூட்டும் முயற்சியிலும் இவர்கள் ஈடுபட்டுள்ளதாய் அறியப்படுகிறது.

எதிர்கட்சிகளில் ஒன்றை அரசாங்கத்துடன் சேர அழைக்கவேண்டும் என அரசாங்க வட்டாரங்களில் கருத்து நிலவுவதாகவும் அதே வட்டாரங்கள் தெரிவித்தன.

அரிசி மான்யம் சம்பந்தமாக அரசாங்கம் பரிசீலனை செய்துவரும் மூன்று முக்கிய அம்சங்கள் வருமாறு:

○ இப்பொழுது கூப்பன் ஒன்றுக்குக் கொடுக்கப்படும் 2 கொத்து அரிசியில் ஒரு கொத்து விலையை அதிகரிப்பது.

○ கூப்பன் அரிசியைப் பாவிக்காதவர்களிடமிருந்து கூப்பன்களை அரசாங்கம் [illegible]

(6-ம் பக்கம் பார்க்க)

## நீதிமன்றத்தில் ஆட்சேபமனு தாக்கல்செய்வாராம்

### துரையப்பா அறிவிப்பு

கொழும்பு, திங்கள்

யாழ்ப்பாணம் மாநகர சபை திடீரென கலைக்கப்பட்டதை ஆட்சேபித்து தாம் சுப்ரீம் கோர்ட்டில் மனுவொன்றை ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு எதிராக தாக்கல் செய்யப் போவதாக யாழ்ப்பாணம் மாநகரசபையின் முன்னுள் மேயர் திரு. ஏ. ரி. துரையப்பா இன்று 'ஈழநாடு' நிருபரிடம் கூறினுர்.

பிரதமமந்திரியை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யும்படி அழைப்பதற்காக கொழும்பு வந்த அவர் இன்றும் கொழும்பிலேயே இருக்கின்றுர்.

யாழ்ப்பாணம் மாநகர

(6-ம் பக்கம் பார்க்க)

## போதனு மொழித் தெரிவில் நிர்ப்பந்தம் இருக்கக்கூடாது

கொழும்பு, திங்கள்

ஒருமாணவனின் போதனு மொழி எதுவாக இருக்க வேண்டும் என்பது பற்றிப் பெற்றேர்களேமுடிவுசெய்ய வேண்டும் என்றும், அகில இலங்கைச் சோனகர் சங்கத்தைப் பொறுத்த மட்டில் சிங்களம், தமிழ் ஆங்கிலம் ஆகிய மூன்றுமொழிகளில் ஒன்றை பெற்றேர்கள் தெரிவு செய்யலாம் எனவும் மேற்படி சங்கக் கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது. போதனு மொழியை பெற்றேர் நிச்சயிப்பதில் அரசாங்கத்தின் எவ்வித நிர்ப்பந்தம் எதுவும் இருக்கக்கூடாது எனவும் சங்கம் தீர்மானித்தது.

சேர் ரசிக்பரீத் தலைமையில் உள்ள சங்கம் நேற்றிரவு கூடியது. போதனு மொழியை தெரிவுசெய்வதில் பெற்றேர்களை நிர்பந்திப்பதை எதிர்க்க வேண்டுமென தங்கள் எம். பி.க்களைக் கோருவதெனவும் சங்கக் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது. இவ்விதம் கோரும் தீர்மானம் ஒன்றும் பிரதமருக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

### வடபகுதி அசைஸ் விசாரணை

## பலாலி கொலை வழக்கு; இன்று தீர்ப்பு

யாழ்ப்பாணம், செவ்.

பலாலி கொலை வழக்குத் தீர்ப்பு இன்றுவழங்கப்படும். நேற்றுக்காலை இவ்வழக்கு விசாரணை இரண்டாவது தினமாகநீதியரசர் டாக்டர் ஏச். டபிள்யூ. தம்பையா கியூ. சி. முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

நேற்றைய தினம் பொன்னர் இளையகுட்டி, இன்ஸ்பெக்டர் எஸ். சிவபாதம் ஆகியோர் சாட்சியமளித்தனர்.

(6-ம் பக்கம் பரர்க்க)

### மலிவு விற்பனை

நீர்கொழும்பு ரூஃபோர்ட் வீட்டுத்தள பாடங்கள், 33 ஸ்ரீ 665 போர்ட்சன் 10 CWT லொறியுடன் விற்பனைக்குண்டு.

விசாரிக்கவும்: இல. 480/8, இந்துக்கல்லூரி ஒழுங்கை, வண்ணுரி பண்ணை 457

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

மாதம் இருமுறை உபவாச விரதமிருப்பது உடலுக்கு நல்லது. நரம்புகள் சுத்தமாகும். தசைகளுக்கு அதிக உயிரும், சக்தியும் ஏற்படும். மனமும் தெளிவாகும், இரத்தம் சுத்தமாகிப் பல நோய்களும் உபவாசத்தால் குணமடையும்.

—சுவாமி சிவானந்தர்


# ஈழநாடு

EELA NADU, National Tamil Daily Post Box 49 JAFFNA
Telegrams/ EELA NADU Jaffna Phone/ 389

யாழ்ப்பாணம் பராபவ ஆண்டு வைகாசி மீ 18 உ (31-5-66)


## கலைக்கப்பட்ட மாநகரசபை

யாழ்ப்பாணத்து மாநகரசபை கலைக்கப்பட்டது இந்நகரப் பொதுமக்களுக்கு மட்டுமன்றி, பொதுவாகஇங்கு தமிழ்ச் சமூகத்துக்கே பெருமையும் மகிழ்ச்சியும் அளிக்க முடியாது. ஈழத்திலே தமிழரின் தலைநகரம் என்று புகழ்பெற்றது யாழ்ப்பாணம். இங்குள்ள மக்களின் பிரதிநிதிகள் சபையாகவுள்ள ஒரு ஸ்தாபனம், அதன் ஆயுட்காலத்துக்கு முன்பாகவே தலத்தாபனக் கமிஷனரால் கலைக்கப்படவேண்டி நேரிட்டது வருந்தத்தக்கதாகும்.

தலத்தாபன கமிஷனர் இங்கு வந்து நேரில் யாழ்ப்பாண மாநகர நிர்வாகத்தைப் பற்றி விசாரணையை அந்தரங்கமாக நடத்தி, சில தஸ்தாவேஜுகளையும் தம்முடன் கொழும்புக்குக் கொண்டு சென்ருர். இரு முன்னுள் மேயர்களும், சில மெம்பர்களும் கூறிய புகார்கள்மீதே அவர் இங்கு வந்து விசாரணைகளை நடத்தியதாகத் தெரிகின்றது. விசாரணை விவரங்களோ குற்றச்சாட்டுகளோ என்னவென்று தெரியவில்லை. இந்நிலையில் இதுகுறித்து நாம் எதுவும் கூறுவதற்கில்லை. என்ருலும் தக்க ஆதாரமின்றிக் கமிஷனர் இந்தப் பாரதூரமான நடவடிக்கையை எடுத்திருக்க முடியாது. தமது விசாரணை விவரங்களைக் கமிஷனர் கூடியவிரைவில் வெளியிடுவது பல விதங்களிலும் அவசியமாகும்.

இந்த மாநகரசபையின் ஆயுட்காலம்வருகிறடிசம்பருடன் முடிந்து, புதிய தேர்தல்நடைபெறவேண்டும் ஏழு மாதத்துக்கு முன்னதாகவே இச்சபை கலைக்கப்பட்டு, நிர்வாகம் மாநகரசபைக் கமிஷனரிடம் ஒப்புவிக்கப்பட்டுள்ளது. எவ்வளவு காலம் கமிஷனரின் நிர்வாகம் நடைபெறும் என்பது தெரியவில்லை. எப்படியும் இந்தக் காலத்தை அனுவசியமாக நீடிக்கக் கூடாது. டிசம்பர் மாதத்திலேயே புதிய தேர்தலை நடத்த ஒழுங்குசெய்ய வேண்டும். ஜனப்பிரதிநிதிகள் இன்றி, கமிஷனரின் ஆட்சி நீடித்து நடப்பது இந்நகரின் நற்பெயருக்கு இழுக்காவதுடன், அது ஜனநாயக தர்மமும் ஆகாது. ஆகவே தலத்தாபன அமைச்சர் தேர்தலை வருகிற டிசம்பரிலேயே நடத்த உத்தரவிடுவாரென்றும், அதற்கிடையே நிலைமை சீர்செய்யப்படுமென்றும் நம்பப்படுகிறது.

தலத்தாபன நிர்வாகத்தில் ஊழல்கள் ஏற்படுவதும், இச்சபைகள் கலைக்கப்படுவதும் புதிதல்ல. கொழும்பு, காலி உள்ளிட்டுப் பல மாநகரசபைகளும் இதற்குமுன் கலைக்கப்பட்டுள்ளன. என்ருலும் நிர்வாக சீர்கேட்டுக்கான அடிப்படைக் காரணங்களை உணர்ந்து, அவற்றை நீக்கத் தக்க நடவடிக்கையை சட்டபூர்வமாக எடுப்பது, தலதாபன சுயாட்சி மேலாக நடைபெற்று மக்கள் நன்மை பெற அவசியமாகும். இப்போதுள்ள சட்டப்படி மேயருக்கே நிர்வாக அதிகாரம் பூரணமாக அளிக்கப்பெற்றுள்ளது. அந்த அதிகார மோகந்தான் மேயர் பதவிக்கான போட்டிகளை அதிகரிக்கவும், மேயர்மீது நம்பிக்கையில்லாத் தீர்மானங்களைக் கொண்டுவரவும் முக்கிய காரணமாக உள்ளது. சென்ற 29மாத காலத்தில் இங்கு மூன்று மேயர்கள் ஏற்றி இறக்கப்பட்டிருக்கின்றனர். இது பெருமைப்படக் கூடியதல்ல. நிர்வாக அதிகாரமனைத்தையும் கமிஷனரின் கைக்கு மாற்றுவதாயின், இவ்வித அவலநிலை ஏற்பட்டிராது.

மேலும் மேயராகத் தெரிவுசெய்யப்படுபவர் நகரமனைத்துக்கும் முதல் பிரஜை. நகரபிதா. நகரின் பெருமையும் மதிப்பும் அவர் கையில்தான் பெரிதும் தங்கியுள்ளது. ஆகவே மேயராகத் தெரிவுசெய்யப்பட்டதும், ஒருவர் தம்கட்சியிலிருந்து விலகி, எல்லாருக்கும் பொதுவானவராகிவிடவேண்டும். கட்சி வேற்றுமைகளுக்கு உட்பட்டவராக இருப்பின், அவர் பலரது எதிர்ப்புக்கும் தம்மை உட்படுத்திக் கொள்வதுடன், பலரது அபிமானத்தையும் ஒத்துழைப்பையும் இழந்து, அப்பதவியின் மதிப்பையும் குறைத்துவிடுபவராவார். மேயரானதும், கட்சியிலிருந்து விலகிவிடுவதென்ற சம்பிரதாயம் இருப்பின், அப்பதவி வகிப்பவர் அதிக நிம்மதியாகத் தம் கடமைகளைச் செய்ய முடியும்.

யாழ்ப்பாண மாநகர சபையைக் கலைத்தது வருந்தத்தக்கதெனினும், இதிலிருந்து பல பாடங்களை மெம்பர்கள் மட்டுமன்றி, பொதுமக்களும் கற்று, இனி புதிய மாநகரசபை மேலான முறையில் நடைபெற வாய்ப்புக் கிடைக்குமாயின், இதுவும் நல்லதற்கேயாகும். ஜனநாயகத்திலே நாம் கற்க வேண்டியவை அதிகமுண்டு. அனுபவத்தால் குறைகளைஉணர்ந்து படிப்படியாக அவற்றைக் கூடுமானவரை நீக்க ஆவன செய்வதே அரசாங்கம், பொ. மக்கள் இவர்களது மேலான கடமையாகும். யாழ்ப்பாண மாநகரசபையின் புதிய தேர்தல் வீண் தாமதங்களின்றி நடந்து, இலங்கைக்கே யாழ்ப்பாணம் மேலான முன்மாதிரியாக விளங்கச் செய்வது இங்குள்ள ஒவ்வொருவரது மேலான புனித கடமையாகும்.

# இளைஞருக்கு நல்வழிகாட்டும் திருமலை சிவயோக சமாஜம்

## நாளையுடன் ஏழாண்டுகள் பூர்த்தி

— சி. இராமச்சந்திரன் —

திருகோணமலை சிவயோக சமாஜ ஆச்சிரமம் ஆரம்பித்து நாளையுடன் ஏழாண்டுகள் நிறைவெய்துகின்றது.

சூது, வாது, பொருமை முதலியவற்ருல் நிம்மதியிழந்து தவிக்கும் மனித இனத்தின் மன நிம்மதிக்காகவும் ஆத்ம ஈடேற்றத்திற்காகவும் அன்பர்கள் சிலரால் ஸ்ரீமத் கங்கா தரானந்தஜியின் தலைமையில் ஒன்பது ஆண்டுகளுக்கு முன்னர் ஆரம்பிக்கப்பட்ட இச்சமாஜம் தனக்கென ஆச்சிரமமொன்றை திருகோணமலை மத்தியில் நிறுவி ஏழாண்டுகளாகிவிட்டன. இக் குறுகிய காலத்திற்கிடையில் இலங்கையெங்கிலும் ஆத்மீக அன்பர் கூழாமொன்றை இச் சமாஜத்தினர் உருவாக்கமுடிந்ததென்ருல் அதிலிருந்து சமாஜஅன்பர்கள் எளிய முறையில் மக்களின் மனதை ஊடறுத்துச் செல்லும்வகையில் சேவைபுரிகின்றனர் என்பது தெளிவாகின்றது.

### நல்ல வழிப்படுத்தும் மாணவரில்லம்

மக்கள் மத்தியில் வெறும் சமயக்கருத்துக்களை மட்டும் பரப்பாது தங்கள் மாணவரில்லத்தில் படிக்கும் மாணவர்களுக்கு வாழ்க்கையைச் சீராக நடத்தக்கூடியமுறையில் தொழிலறிவை மாணவர்கள் கட்டாயம் பெற வேண்டுமென்ற பெருநோக்குடன் விவசாயம், கைத்தொழில்முறைகளை செயல்முறையில் படிப்பித்துவருகின்றனர்.

பாடல்பெற்ற திருத்தலமான இங்கு ஜெயம்புரியும் இந்துசமயத்தவர்கள் மட்டுமல்ல வேற்று மதத்தவர்களும் கூட சிவயோகசமாஜ ஆச்சிரமத்திற்கு வருகை தந்து சுவாமி கங்காதரானந்தஜியையும் தரிசித்துச் செல்லத்தவறுவதில்லை.

இச் சமாஜம் திருமலை மக்கள் மத்தியில் பல சமய சமூகப்பணிகளை வெற்றிகரமாக முடித்துவருவதற்குக் காரணம் சமாஜநிர்வாகிகளாக கடமையாற்றும் அன்பர்களின் தளராத விடாமுயற்சியே. சமாஜ ஆச்சிரம செயலாளராக ஆரம்பகாலந்தொட்டு இன்றுவரை கடமையாற்றி வரும் சைவசிகாமணி பண்டிதர் இ. வடிவேலுவும் பொருளாளராகக் கடமையாற்றும் ஆசிரியர் திரு. சு. நவரத்தினமும் சமாஜ அலுவல்களை கண்ணும் கருத்துமாகக் கவனித்து வருகின்றனர்.

இவ்வாச்சிரமத்தின் கிளையொன்று ஆண்டாள் குளத்திலுள்ளது. ஆச்சிரமத்திற்கென வயல்நிலங்கள் பரணமதவாச்சி எனுமிடத்தில் உள்ளது.

ஜூன் 1-ம் 2-ம் திகதிகளில் நடைபெறவிருக்கும் சிவயோக சமாஜ ஆச்சிரமப் பிரவேச நினைவுவிழாவில் முதல்நாள் நிகழ்ச்சிகள் இராமலிங்கசுவாமிகளின் நூற்ருண்டு விழாவாகக் கொண்டாடப் படுகின்றது.

## பெயர் மாற்ற சபை

யாழ்ப்பாணம், திங்.

பெயர் மாற்ற சபையின் விசாரணை ஜூன் மாதம் 8-ம் திகதி திரு. டி. டபிள்யு. செ வரத்தினம் தலைமையில் யாழ்ப்பாணம் செயலக கமிட்டி அறையில் ஆரம்பமாகும்.

முதலாவதாக, சிவியா தெரு என்ற பெயரை அரியாலை என மாற்ற வேண்டும் என்ற விண்ணப்பம் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

நெடுந்திவு என்ற பெயர் ஆங்கிலத்திலும் அப்படியே வழங்கப்பட வேண்டும் என்றும் விண்ணப்பிக்கப்பட்டுள்ளது.

பல குறிச்சிகளின் பெயர்களை மாற்றும் படியும் மனுக்கள் சமர்ப்பிக்கப் பட்டிருகின்றன.

## சுகாதார வாரம்

மாவிட்டபுரம், திங்கள்

மக்கள் சுகாதாரவாரம் அடுத்த மாதம் 5-ம் திகதி தொடக்கம் 11-ம் திகதி வரை இலங்கை பூராவும் கொண்டாடப்படவிருக்கிறது. இவ்வருடம் இவ்வாரத்தின்போது குடும்பக் கட்டுப்பாடுபற்றியே முக்கியமாகப் பிரசாரம் செய்யப்படும்.

காங்கேசன்துறைப் பட்டினசபையினர் சுகாதார வாரத்தையொட்டி ஒரு விளையாட்டுச் சுற்றுப்போட்டியை நடத்தி வருகிருர்கள். எதிர்வரும் ஒன்பதாம் திகதி பட்டினசபை திறந்த வெளியரங்கில் சுகாதார விழாவொன்றை நடத்தவும் ஒழுங்குகள் செய்துவருகிருர்கள். ஆரோக்கிய இராஜனும் ஆரோக்கிய இராணியும் தெரிவுசெய்யப்படுவார்கள்.

(5-ம் கலத் தொடர்ச்சி)

யும் அன்புள்ள தாய்புறக்கணிப்பாரா? அழுக்கைக்கழுவி சுத்தமாக்கு வாரல்லவா? அதுபோல சைவசமயத்தில் பிறந்த எல்லாக் குழந்தைகளுக்கும் சமயப்பிரவேசம் செய்ய உரிமையுண்டு. 'குலமில ராயினும் குலத்திற்கேற்றதோர் நலமிகக்கொடுப்பது நமச்சிவாயவே' என்ற அப்பர் சுவாமிகள் இடித்துக்கூறவில்லையா?

இன்று சைவ சமூகம் பல வீனமாக இருப்பதற்குக் காரணம், அதிலுள்ளபெரும் பாலோருக்கு சமயப்பிரவேசம்செய்ய இடமளிக்காதது தான். சைவராகப்பிறந்தும் அவர்களுக்கு அதன் பயன் கிடைக்கமுடியாதபடி உள்ளது. இது பெரியதுரதிருஷ்டமாகும்.

சென்ற வெள்ளிக்கிழமை கொழும்பிலே ஒரு பள்ளிவாசலில் தொழுதுவிட்டு ஏராளமான முஸ்லிம்கள் மனநிம்மதியுடன் வெளிவருவதைக் கண்டேன். ஐந்து வேளை தொழுவதால்அவர்களுக்கு ஆத்மீகப்பலமும் அதிகரிக்கின்றது. சிறிய சமூகமாக இருப்பினும், முஸ்லிம்கள் அதிக கட்டுப்பாடாகவும்பலமாகவும் இருப்பதின் ரகசியம் அவர்கள் செய்யும் கூட்டுப்பிரார்த்தனை தான்.

சைவசமயத்தில் பிறந்தவர்கள் அனைவரும் சமயப் பிரவேசம் செய்து, திருவருள் பெற்ருல்தான் அச் சமூகம் தழைத்தோங்கமுடியும். அதற்கான பணியை பெரியோர்களைக்கொண்டு செய்வதைவிட, சைவசமூகத்துக்கு அதிகமேலானபணி வேறுண்டா?

ஃ ஃ ஃ

பாடல் வீணையர் பலபல சரிதையர் எருதுகைத்தரு நட்டம், ஆடல் பேணுவர் அமரர்கள் வேண்ட நஞ்சுண்டிருள் கண்டத்தர், ஈடமாவது இருங்கடற்கரையினில் எழில்திகழ் மாதோட்டம், கேடிலாத கேதீச்சரந்தொழுதெழக் கெடுமிடர் வினைதானே.

—திருஞான சம்பந்த சுவாமிகள்

# ஐயாறன் எழுதுவது

யாழ்ப்பாண மாநகரசபை கலைக்கப்பட்ட செய்தியை நேற்றுகாலை 'ஈழநாடு' பத்திரிகையில் படித்துவிட்டு பல அன்பர்கள் திடுக்குற்றனர். உண்மைதானு? கொழும்பு பேப்பர்களில் ஒருவார்த்தையும் இல்லையே என்றுபலரும் டெலிபோனில் ஆவலுடன் கேட்டனர்.

மற்ற பேப்பர்களில் இச்செய்தி வெளிவராததற்கு நாம் பொறுப்பல்ல. உண்மையான செய்திகளை உடனுக்குடன் சுடச்சுடவெளியிடுவதில் 'ஈழநாடு' முன்னிற்கிறதென்பதற்கு இது மற்ருேர் அத்தாட்சியாகும். இந்தப் பணியை மேன்மேலும் நன்கு செய்ய இறையருளையும், உங்கள் பூரண ஒத்துழைப்பையும் நாங்கள் வேண்டியிருக்கின்ருேம்.

ஃ ஃ ஃ

பிரதம மந்திரி திரு. டட்லி சேனநாயகா யாழ்ப்பாண மாநகரசபையின் அழைப்பை ஏற்றுக்கொண்டுஇங்கு வருவதாக இருந்தார். அனேகமாக ஜூன் மாதம் இரண்டாவது வாரத்தில் அவர் இங்கு விஜயம் செய்யக் கூடுமென்று ஒரு வதந்தியுமிருந்தது.

அதற்கிடையே நமதுமாநகரசபையே கலைக்கப்பட்டுவிட்டது. இந்நிலையில் பிரதமர் இங்கு எப்படி வருவார்? அவரது விஜயம், புதியமாநகரசபை தெரிவு செய்யப்படும்வரை ஒத்திவைக்கப்படுமா அல்லது வேறுஏதாவட் காரணத்தைமுன்னிட்டு வருவாரா?

அவர் விரைவில்இங்கு வருவாரென்று ஆவலுடன்எதிர்பார்த்தவர்களுக்கு இப்போது பெரிய ஏமாற்றம். யாழ்ப்பாணத்துக்கு இலங்கைப் பிரதம மந்திரிகளே பல்லாண்டுகளாக வரமுடியாதபடி ஏனோ விதி இப்படித் தடுத்து வருகிறது!

ஃ ஃ ஃ

யாழ்ப்பாணத்திலே ஸ்ரீ ராமகிருஷ்ண மடத்தின்கிளை ஒன்றை அமைக்க சில அன்பர்கள் முயற்சிப்பதாக அறியவந்தேன். இங்கு அந்த மடத்தார் நடத்தி வந்த ஸ்ரீ வைத்தீச்வர வித்தியாலயம் அரசாங்கத்தின் கைக்கு மாறியபின், யாழ்ப்பாணத்துடன் அம் மடத்தின் தொடர்பு அறுபட்டு விடுமோவென்று சிலர் அஞ்சினர். அதிபர் அம்பிகைபாகன் உள்ளவரை அத்தொடர்பு ஒரு விதத்தில் நீடிக்கலாமென்றும், பின்பு அது மறைந்துவிடக் கூடுமென்றும் ஓரன்பர்கருத்துத் தெரிவித்தார்.

அந்தமாதிரியான ஓர் ஆபத்து ஏற்பட இறைவன் விடுவாரா? தங்கள் அருளாசியாலே, அந்த வித்தியாலயத்தை இவ்வளவு தூரம் வளர்த்துள்ள அப்பெரியார்களின் தொடர்பு நீடித்து பலப்படச்செய்யவேண்டும். அங்கு கல்வி கற்கும் சைவ மாணவமாணவிகளுக்கு, அம் மடத்து சுவாமிகள் மந்திர தீட்சை அளித்து, சமயப் பிரவேசம் செய்விக்கவேண்டிய பெரும்பணியுண்டு. இதுவரை இதுபற்றிஒன்றும் செய்யப்படாதது பெருங் குறை. இனி இப்பணியை அப்பெரியார்களைக் கொண்டு செய்யவேண்டும். இங்கு மடத்தின் புதியகிளை ஏற்பட்டு அம்முக்கியபணி நிறைவேற திருவருள் கூட்டுமென்பதே என் நம்பிக்கை.

ஃ ஃ ஃ

மாணவமாணவிகளின் தகுதியைக் கண்டுதான் தீட்சையளிக்கப்படவேண்டியிருக்குமென்ருர் ஓரன்பர். அழுக்குடன் கூடிய குழந்தைகளை

(4-ம் கலம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கெய்ரோ வனந்தரத்தில் பொலிஸார் 'வேட்டை'

கெய்ரோ, மே. 30

ஹெலிபோலிஸ் என்னுமிடத்துக்கு அருகிலுள்ள ஒரு வனந்தரப்பகுதியில் சுமார் 600 கெய்ரோ பொலிஸார் மனிதவேட்டையில் இறங்கியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை இப்பகுதியில் சட்டவிரோதக் கடத்தல்காரர்களுக்கும் பொலிஸாருக்கு மிடையே ஏற்பட்ட மோதலின்போது கடத்தல்காரர் நான்கு பொலிஸாரைச் சுட்டுக் கொலைசெய்துவிட்டுத் தப்பியோடிவிட்டனர். இவர்களைக் கண்டுபிடிப்பதற்காகவே கெய்ரோ பொலிஸார் இப்பொழுது மேற்படி வேட்டையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுசம்பந்தமாக 13 பெண்கள் உள்ளிட்டு 136 சந்தேகநபர்கள் பொலிஸார் வலையில் சிக்கியுள்ளனர். இருந்தபோதிலும் சட்டவிரோதக்கடத்தல்காரர்களுக்கும் பொலிஸாருக்குமிடையே ஏற்பட்ட மோதலில் பொலிஸரைச் சுட்டு வீழ்த்திய நபர்களை பொலிஸார் இதுவரை கைது செய்யவில்லை. (பி. டி. ஐ.)

# மற்றோர் இளம் பிக்குனி தீக்குளிப்பு

## தென்வியட்நாமில் இரண்டாவது சம்பவம்

சைகோன், மே 30

சைகோனில் மற்றோர் இளம் பிக்குனி தீக்குளித்தார். ஹூவேயில் நடைபெற்ற முதலாவது தீக்குளிப்புக்குச் சில மணி நேரத்தின் பின், சைகோன் பௌத்த தலைமையக வளவுக்குள் இச்சம்பவம் நடைபெற்றது.

கீ அரசாங்கத்தின் கொள்கையை எதிர்த்தும், அமெரிக்கா அதற்கு ஆதரவளிப்பதை எதிர்த்தும் இவ்வித தற்கொலைகள் நடைபெறுகின்றன.

அமெரிக்கா, கீயின் அரசாங்கத்திற்கு அளிக்கும் ஆதரவை நிறுத்தினாலன்றி, இவ்வித தற்கொலைகளுக்கு ஜனாதிபதி ஜோன்ஸன்தான் நேரடிப் பொறுப்பு வகிக்க வேண்டுமென பௌத்ததலைவர் ஒருவர் எச்சரித்தார்.

இதற்கிடையில் சைகோனில் இன்று பொதுவேலை நிறுத்தம் ஆரம்பமாகியது. ஹூவே நகரில் அமெரிக்க ராணுவத்தளம் தாக்கப்பட்டது. அங்குள்ள அமெரிக்க கலாச்சார நிலையத்துக்கு தீ மூட்டப்பட்டது.

கம்போடிய எல்லையில் அமெரிக்க விமானங்கள் வியட்காங்கியர் மீது தாக்குதல் நடத்தினர். ஒரு விமானம் சுட்டு வீழ்த்தப்பட்டது.

பாங்காக் சந்திப்பு

# இந்தோனேஷியா - மலேஸியா புதிய உறவு மலரும்!

## விரைவில் ராஜியத் தொடர்பு என இருதரப்பும் நம்பிக்கை

பாங்காக், மே 30

இந்தோனேஷிய வெளிநாட்டு மந்திரி டாக்டர் மாலிக்கும், மலேஸிய துணைப் பிரதமர் துன் அப்துல் ரஸாக்கும் நேற்று தாய்லாந்து வெளி மந்திரி திரு. தனத் கோமனின் இல்லத்தில் பூர்வாங்கமாகச் சந்தித்தனர்.

நிகழ்ச்சிநிரல் பற்றி அவர்கள் முடிவுசெய்ததாகத் தெரிகிறது

உடன்பாடு ஒப்பந்தம் எதிலும் கைச்சாத்திடும் அதிகாரத்துடன் வந்திருப்பதாக இரு தூதுகோஷ்டித் தலைவர்களும் அறிவித்தனர்

இன்னும் சில தினங்களுக்குள் மலேஸியாவுக்கும் இந்தோனேஷியாவுக்குமிடையே ராஜதந்திர உறவு ஏற்படுத்தப்படும் என்ற நம்பிக்கையுடன் மூவரும் வந்திருப்பதாக மாலிக்கும், ரஸாக்கும் தெரிவித்தனர்.

இந்தோனேஷியாவுடன் நட்புறவு பூண்டிருக்கும் ஆவலை மலேஸியதுணைப்பிரதமரும், மலேஸியாவுடன் இத்தகைய ஆவலை இந்தோனேஷிய வெளி மந்திரியும் வெளியிட்டனர்.

### ரஷ்யா எச்சரிக்கை

மாஸ்கோ, மே 30

கியூபாவுக்கு ரஷ்யா ஆதரவளிக்கிறதென்றும், அந்நாட்டின்மீது ஆக்கிரமிப்பு நோக்கத்தைக் கைவிட வேண்டுமென்றும் அமெரிக்காவுக்கு மாஸ்கோ எச்சரிக்கை விடுத்திருக்கிறது.

### முதல் ரஷ்யரின் பிறந்தநாள்

மாஸ்கோ, மே 30

இந்தியாவுக்கு முதலாவது வந்த ரஷ்யரெனக் கூறப்படும் நிக்கிதினின் 500வது பிறந்த தினம் வொல்கா நதிக்கரையிலுள்ள அவரது கிராமத்தில் கொண்டாடப்பட்டது.

### சுபாந்திரியோ விசாரிக்கப்படுவார்

ஜாகர்த்தா, மே 30

புரட்சியில் பங்குபற்றியதாக முன்னாள் இந்தோனேஷிய வெளிநாட்டுமந்திரி டாக்டர் சுபாந்திரியோ, நிச்சயம் விசாரணைக்குக் கொண்டு வரப்படுவாரென அந்நாட்டு அட்டோர்ணி ஜெனரல் கூறினர்.

# சீனப்படகுகள் மீது அமெரிக்க குண்டுமாரி

## மூவர் பலி: 18 பேருக்கு காயம்

## ஒருபடகு மூழ்கியது

## டொன்கின் வளைகுடாவில் - நடைபெற்ற சம்பவம்

பீகிங், மே 30

வடவியட்நாமுக்கருகே டொன்கின் வளைகுடாவில் ஆறு சீனப்படகுகளை அமெரிக்க விமானங்கள் தாக்கியதால் மூவர் கொல்லப்பட்டதாயும், 18 பேர் காயமடைந்ததாயும், ஒரு படகு மூழ்கி, 3 படகுகள் சேதமுற்றன என்றும் சீனப் பாதுகாப்பு அமைச்சு அதிகாரி ஒருவர் கூறினர்.

இது கடும் ஆத்திரமூட்டும் செயல் என்றும் அவர் வருணித்தார்.

இதே சமயம் அமெரிக்காவின் எத்தாக்குதலையும் எதிர்த்துப் போராடத் தயாராக இருக்குமாறு சீன மக்கள் எச்சரிக்கப்பட்டிருக்கிறார்கள்.

ஆனால் இத்தாக்குதல் பற்றித் தங்களுக்கு தகவல் இல்லை என வாஷிங்டன் அதிகாரிகள் கூறினர். இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கவும் அவர்கள் மறுத்துவிட்டார்கள்,

இத்தாக்குதலில் 3 அமெரிக்க விமானங்கள் பங்குபற்றியதாயும், குண்டு வீச்சுக் காரணமாக ஒரு ஆணும் ஒருபெண்ணும் குழந்தையும் மாண்டனர் என்று அறிவிக்கப்பட்டது

கிளே

### "முஸ்லிம் வீரரே வருக"

கெய்ரோ, மே 30

ஒவ்வொரு சண்டையிலும் வெற்றிபெற்ற பின்பு தாம் ஐக்கிய அராபியக் குடியரசுக்கு விஜயஞ்செய்யப்போதாய் உலக அதிபார குத்துச்சண்டைச் சாம்பியன் முகமதலி கிளே வாக்குறுதியளித்தார்

இஸ்லாமிய விவகார உயர் சபை, கிளேயைக் கௌரவிக்க நடத்திய விருந்தொன்றில் அவர் இதைத் தெரிவித்தார்.

அரபு மொழியிலும், ஆங்கிலத்திலும் ஒலிப்பதிவு செய்யப்பட்ட பிரார்த்தனைகள் அவருக்குப் பரிசளிக்கப்பட்டன. 'முஸ்லிம் வீரர்' என உங்களை வரவேற்கிறோம் எனக் கூறும் இசைத்தட்டும் அதிலிருந்தது. (ப டி ஐ)

### மனித சக்தி கணிப்பாளர்

கொழும்பு, திங்கள்

தொழில் நுட்பத்துறையில், மனிதசக்திக்கணிப்பு, திட்டத்தயாரிப்பு ஆகியவை சம்பந்தமாக இலங்கைக்கு ஆலோசனை கூறுவதற்கு ஐ. நா. சர்வதேச தொழில் இயக்கம் இத்துறையில் நிபுணரான திரு. ஆர் கே ஸ்ரீவஸ்தாவாவை அனுப்பியுள்ளது. இவர் ஆறுமாத காலம்வரை இத்துறையில் இலங்கைக்கு உதவுவார். திரு. ஸ்ரீவஸ்தாவா இந்திய அரசாங்கத்தில் மனிதசக்தி கணிப்பாளர் பகுதி உதவிக் காரியதரிசியாக முன்னர் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது.

### தினேஷ் சிங்

ஜார்ஜ்டவுன், மே 30

இந்திய உதவி வெளிநாட்டுமந்திரி திரு. தினேஷ் சிங் கயானாவிலிருந்து நியூயோர்க் புறப்பட்டிருக்கிறார் தாயகம் திரும்பும் வழியில் அவர் பெல்கிரேடிலும், கெய்ரோவிலும் தங்கி நாஸர்- டிட்டோ- இந்திரா முக்கூட்டுப் பேச்சுப் பற்றி விவாதிப்பார்.

### ஹாக்கி விழா

புதுடில்லி, மே 30

அடுத்த ஜனவரி மாதம் இந்தியாவில் நடைபெறவிருக்கும சர்வதேச ஹாக்கி விழாவுக்கு நல்ல ஆதரவு இருப்பதாயும், பாகிஸ்தான் ஹாக்கிக்கோஷ்டியும் இதில் கலந்து கொள்ளவேண்டுமென்றும் அறிவிக்கப்பட்டது.

### அஸ்ஸாம்- கி. பாக். எல்லை

ஷில்லாங், மே 30

அஸ்ஸாம்-கிழக்கு பாகிஸ்தான் எல்லையில் பாகிஸ்தான் ஊடுருவலைத் தவிர்க்கும்பொருட்டு பாதுகாப்பு நடவடிக்கைகள் பலப்படுத்தப்பட்டிருப்பதாய் அறிவிக்கப்பட்டிருக்கிறது. 620 மைல் நீளத்துக்குப் பாதுகாப்புகள் செய்யப்பட்டுள்ளன.

### ஆலய உற்சவம்

காரைநகர், திங்கள்

காரைநகர் பாலோடை அம்மன் ஆலய வருடாந்த உற்சவம் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பமாகியது. இவ் உற்சவம் தொடர்ந்து பத்துத்தினங்களாக நடைபெறும். 9-ம் நாள் இரதோற்சவமும் 11-ம் நாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும்.

சீனவில்

# கட்சிக்கும் ராணுவத்துக்கும் முரண்பாடு நீடிப்பு

பீகிங், மே 30

சீனக் கம்யூனிஸ்ட் கட்சியின் அரசியல் பிரிவுக்கும் முப்படைகளுக்குமிடையேயான தகராறு நீடித்து வருவதாகத் தெரிகிறது சென்ற நவம்பரில் ஆரம்பித்த இக்கெடுபிடி இப்போது கம்யூனிஸ்ட்கட்சியின் மத்திய கமிட்டிக்கும் பரவியிருப்பதாகக் கூறப்படுகிறது. கட்சிக்கு விரோதமான இசை, நாடகம் ஒன்றை மத்தியகமிட்டி உறுப்பினர் ஒருவரே படைப்பினராம். புரட்சியைத்தொடர்ந்து நடத்திச் செல்வதா இல்லையா என்ற பிரச்னையில் இத்தகராறு முளைத்திருப்பதாய்த் தெரிகிறது.

# தடுப்புமருந்து ஏற்ருத ஊழியர்கள்

## கடமையாற்றும் நிலையங்களுக்கு லைசன்ஸ் கிடைக்காது

யாழ்ப்பாணம். செவ்

பால் பண்ணைகள், பாண் தயாரிப்பு நிலையங்கள், போசனசாலைகள், தேநீர்ச்சாலைகள், சோடாத் தொழிற்சாலைகள் ஆகியவைகளில் கடமையாற்றுவோர் நெருப்புக்காச்சல் தடுப்பு ஊசி ஏற்றிக்கொண்டதற்கும், க்ஷயரோகத் தடுப்பு மருந்து ஏற்றியதுடன், எக்ஸ்ரே படம் பிடித்து பரிசோதனை செய்துகொண்டதற்கும் தகுந்த வைத்தியசாலைகளிலிருந்து அத்தாட்சிப்பத்திரம் பெற்றிருக்கவேண்டும். இவ்வித அத்தாட்சிப்பத்திரம் பெருத ஊழியர்களையுடைய இந்த நிலையங்களுக்கு புதிய லைசென்ஸ் வழங்கப்படமாட்டாது.

யாழ்ப்பாண மாநகரசபை உணவுமருந்துச் சட்டத்தை தீவிரமாக அமுல்நடத்தத் திட்டமிட்டிருப்பதே இதற்குக் காரணம். மாநகரசபை உணவு, மருந்து இன்ஸ்பெக்டர் திரு. ரீ. ராஜரத்தினம் இநத நடவடிக்கைகளை எடுத்துள்ளார்.

நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்திலுள்ள பால் பண்ணையொன்றுக்கு வெளியே அவரும் மற்றும் மாநகரசபை சுகாதாரபரிசோதகர்களும் நடத்திய திடீர்பரிசோதனைகளின் விளைவாக பத்துப் பால்காரரின் பால்கள் யாழ்ப்பாணம் நீதவான் முன் சமர்ப்பிக்கப்பட்டு கொழும்பிலுள்ள அரசாங்க பரிசோதகரிடம் சுகாதாரப் பகுதி மேற்பார்வையாளர் திரு. ஜே. அந்தோனிப்பிள்ளையினுல் கொண்டு செல்லப்பட்டது. (ந. நி)

### நீதிபதிகள் இடமாற்றம்

மாவிட்டபுரம், திங்கள்

மல்லாகம் நீதிபதி திரு. ஜி. எவ். எச். அத்துருபாழு ஜூலை மாதம் முதலாம் திகதி குளியாப்பிட்டிக்கு இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

இவரின் இடத்திற்கு குருநாகல் மாஜிஸ்டிரேட் நீதிபதி திரு. டி. எஸ். நித்சிங்கி இடமாற்றம்செய்யப்பட்டுள்ளார்.

குளியாப்பிட்டி நீதிபதி திரு. ஆர். பரமகுரு மன்னூருக்கும் மன்னார் நீதிபதி திரு. ஒ. எஸ். எம். செனிவிரத்ன குருநாகலுக்கும் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர். இவ் இடமாற்றங்கள் ஜூலைமுதல் அமுலுக்கு வரும்.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# தீவுப்பகுதிகளின் முக்கிய பிரச்னைகள்

## எம். பி. தலைமையில் ஆராயப்பட்டன

யாழ்ப்பாணம், செவ்வாய் தீவுப்பகுதி அபிவிருத்தி குறித்து ஊர்காவற்றுறை எம். பி. திரு. வி. நவரத்தினம் தலைமையில் நடைபெற்ற கூட்டமொன்றில் பல முன்னேற்றத் திட்டங்கள் பற்றி ஆராயப்பட்டன. தமிழரசுக்கட்சி தலைமைக் காரியாலயத்தில் நடைபெற்ற இக்கூட்டத்துக்கு கிராம முன்னேற்றச்சங்கத் தலைவர்கள் உள்ளிட்டு எழுபதுக்கும் அதிகமானவர்கள் சமூகமளித்திருந்தனர்.

தீவுப்பகுதிகளை எதிர்நோக்கியுள்ள பல முக்கிய பிரச்னைகள் குறித்தும் இக்கூட்டத்தில் ஆராயப்பட்டன

வேலணை, புங்குடுதீவு, ஊர்காவற்றுறை ஆகிய இடங்களிலுள்ள ஆஸ்பத்திரிகளின் சீர்கேடுகள், குறைபாடுகள் குறித்தும் யாழ்ப்பாணம்-தீவுப்பகுதிகளுக்கான பஸ் சேவைகள் பற்றியும் இக்கூட்டத்தில் விரிவாகப் பரிசீலனை செய்யப்பட்டு இதுசம்பந்தமாக நடவடிக்கைஎடுப்பதென்று முடிவு செய்யப்பட்டது.

மோசமான நிலையிலிருக்கும் வீதிகளைக் திருத்தி அமைத்துத்தருமாறு கோருவதென்றும் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டது.

### தடுப்பு நடவடிக்கை

தீவுப்பகுதியில் நடைபெறும் திருட்டுச் சம்பவங்களைத் தடுக்க பண்ணையில் தடுப்பு முகாமொன்றை நிறுவவேண்டுமென்று தெரிவிக்கப்பட்ட யோசனை இக்கூட்டத்தில் வரவேற்கப்பட்டதுடன் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள சம்பந்தப்பட்ட அதிகாரிகளுடன் தொடர்புகொள்ள வேண்டுமென்றும் கூட்டத்தில் முடிவுசெய்யப்பட்டது.

தீவுப்பகுதி மக்களின் முன்னேற்றம் கருதி கைத்தொழில் நிலையங்களை பரவலாக நிறுவ நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும்தீர்மானிக்கப்பட்டது.

தீவுப்பகுதி மக்களை எதிர்நோக்கியுள்ள குடிநீர்ப் பிரச்னையைத் தீர்த்துவைக்க அரசாங்கத்துடன் விரைவில் பேச்சுக்களை நடத்தவேண்டுமென்று கோரும் தீர்மானமும் கூட்டத்தில் நிறைவேறியது.

### எம். பி. உறுதி

கூட்டத்தில் திரு. வி. நவரத்தினம் எம். பி., பேசுகையில், தீவுப்பகுதிகளின் முன்னேற்றத்துக்காக தாம் பெரிதும் பாடுபடுவதாகவும் தமது சக்திக்குட்பட்டவகையில் அரசாங்கத்துடன் தொடர்புகொண்டு பல ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை மேற்கொள்வதாகவும் கூறினர்.

பண்ணையில் தடுப்புமுகாம் நிறுவுதல் உட்பட இக்கூட்டத்தில் ஆலோசிக்கப்பட்ட சகல விஷயங்கள் குறித்தும் சம்பந்தப்பட்ட அரசாங்க அதிகாரிகளுடன் தொடர்புகொண்டு விரைவில் ஆவன செய்வதாகவும் திரு. வி நவரத்தினம் உறுதி கூறினர்.

---

### பொலிஸ் உத்தியோகத்தர் பதவிக்கான பரீட்சை

பம்பலப்பிட்டி, ஞாயிறு பொலிஸ் கான்ஸ்டபிள்களையும், உதவி இன்ஸ்பெக்டர்களையும் தெரிவுசெய்வதற்காக இப்பொழுது நாடு முழுவதிலும் நேர்முகப் பரீட்சைகள் நடைபெறுகின்றன மாகாண ரீதியில் நடாத்தப்படும் இந்நேர்முகப்பரீட்சைகளை அந்தந்த மாகாணங்களின் பொலிஸ் சுப்பிரின்டன் தலைமையில் உள்ள பரீட்சைக் குழுக்கள் நடத்திவருகின்றன. நாடு முற்றிலுமிருந்து முதலாவது தகுதிகாண் பரீட்சையில் தெரிவுசெய்யப்பட்ட 10,000 பேரும் இப்பொழுது நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கப்பட்டுள்ளனர்.

### பட்டினசபையின் கூட்டம்

மாவிட்டபுரம், திங்கள் காங்கேசன்துறைப் பட்டினசபையின் மாதாந்தப் பொதுக்கூட்டம் சபைத்தலைவர் திரு. ஆ. வ. சதாசிவம் தலைமையில் நடைபெற்றபோது ஆரும்வட்டார அங்கத்தவரும் உபதலைவருமான திரு. பி. இம்மானுவேல் காங்கேசன்துறை அரசினர் ஆஸ்பத்திரியை தெல்லிப்பழைக்குக்கொண்டுபோக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுவதையிட்டு மயிலிட்டியிலுள்ள மக்கள் பெரிதும் பாதிக்கப்படுவார்களென்றும் எனவே மயிலிட்டியில் ஒரு மருந்துகொடுக்கும் நிலையம் அமைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனவும் கேட்டுக்கொண்டார். இதைச் சபை ஏற்றுக்கொண்டு ஆகவேண்டிய நடவடிக்கைகள் எடுப்பதென தீர்மானிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் நகரசுத்தி தொழிலாளருக்கு குடிசை அமைப்பதற்கு வேலை மேற்பார்வையாளரால் சமர்ப்பிக்கப்பெற்ற ரூபா 410/50 மதிப்புத்திட்டம் பரிசீலனை செய்யப்பெற்று இவ்விடயம் சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன அதிபரிடமிருந்து கிடைத்த கடிதம் பரிசீலனை செய்தபின் இவ்வருட வரவு செலவுத் திட்டத்தில் மேலதிகமாக இருக்கும் 37939 ரூபாயிலிருந்து ரூபா 200[illegible] மேலதிகச்செலவு அங்கீகரிக்கப்பட்டது.

ஆரும் வட்டார அங்கத்தவர் திரு. பி இமானுவேல் மயிலிட்டிக்கரை யென்னும் ஊர்ப்பெயரைமாற்றிமயிலை நகர் என அழைக்கப்பட வேண்டுமெனக் கொண்டு வந்த பிரேரணை அவ்விடங்களில் வதியும் பொதுமக்களின் அபிப்பிராயத்தினைக் கோரி அடுத்த கூட்டத்தில் ஆலோசிப்பதெனத் தீர்மானிக்கப்பட்டது.

---

# மீனவப் பெண் மீது பலாத்காரம் செய்ய முயன்றவர் யார்?

## தகுந்தநடவடிக்கை எடுப்பதாக இராணுவத்தினர் வாக்குறுதி

வல்வெட்டித்துறை, திங்கள் வல்வெட்டித்துறை ஊரிக்காடு இராணுவ நிலையத்திற்கு அண்மையில் வசித்துவரும் ஒரு பெண் நேற்றிரவு 7-30க்கு மேல் வழமைபோல் சூழ்கொண்டு கடற்கரையில் மீன்பிடிக்கச் சென்றபோது கால்சட்டை அணிந்த ஒருவர் அப்பெண்மணிக்கு பின்புறமாகச் சென்று அவர்மீது பலாத்காரம் செய்ய எத்தனித்ததாகவும் இதனால் அவர் கூச்சலிடவே அச்சத்தத்தைக் கேட்டு அவரின் தாயார் ஓடிவர அந்நபர் இராணுவ நிலையத்திற்குள் ஓடிவிட்டாராம்.

இச்சம்பவம் பற்றி உடனடியாக வல்வெட்டித்துறைப் பொலிசாருக்கும் பருத்துத்துறை எம். பி. திரு. க. துரைரத்தினத்திற்கும் புகார் செய்யப்பட்டது. பெண்மணி பருத்தித்துறை அரசினர் வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்

இச்சம்பவம் சம்பந்தமாக எம். பி. பலாலி இராணுமேலதிகாரியுடன் தொடர்பு கொண்டதன்பேரில் இராணுவ மேஜர் திரு. அமிர்தலிங்கம், கள்ளக்கடத்தல், கள்ளத்தோணிப் பொறுப்பு சுப்பிரிண்டன், வல்வெட்டித்துறைப் பொலிஸ் பொறுப்பு அதிகாரி ஆகியோர் ஸ்தலத்திற்குச் சென்று விசாரணை செய்தனர். விசாரணையின் பின் மேலதிகாரிகள் ஏற்ற நடவடிக்கைகள் எடுப்பதாக எம். பிக்கும் அப்பகுதி மக்களுக்கும் உறுதியளித்துள்ளனர்.

---

### ஆசிரிய மாணவரின் சுற்றுலா

யாழ்ப்பாணம், செவ். பலாலி அரசினர் ஆசிரியர் கழக கணித, விஞ்ஞான, கைப்பணி கழகச் சுற்றுலாக் குழுவினர் ஒரு கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு திரும்பியுள்ளனர்.

விரிவுரையாளர்களான சிவநாதன், செல்வி. க. சின்னப்பு உட்பட முப்பத்தைந்து ஆசிரிய மாணவர்கள் இச் சுற்றுலாவிற் கலந்துகொண்டனர். மிகுந்தலை, பொலநறுவை, வாழைச்சேனை, மட்டக்களப்பு, அம்பாறை, நுவரெலியா, கண்டி கொழும்பு முதலிய இடங்களைப் பார்வையிட்டனர். வாழைச்சேனையில் உள்ள காகித உற்பத்தி தொழிற்சாலை அம்பாறை சீனி உற்பத்தி தொழிற்சாலை ஆகியவற்றையும் இவர்கள் பார்வையிட்டனர்.

---

### தபாற்காரரிடம் வழிப்பறி

கொழும்பு, திங்கள் புத்தளத்திலிருந்து ஐந்து மைல் தொலைவிலுள்ளஇடத்தில் 4 தபாற்பைகள் ஒரு தபாற்காரரிடமிருந்து வழிப்பறி செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்தப் பைகளிலிருந்த 400ரூபாவும் வழிப்பறி செய்யப்பட்டுள்ளதாக அறியப்படுகிறது.

லோரன்ஸ் பெரேரா என்ற இந்த தபாற்காரரை கொள்ளைக்காரர்கள் ஒரு மரத்துடன் கட்டிவைத்தார்கள் எனத் தெரியவந்துள்ளது.

இந்த வழிப்பறி சம்பந்தமாக கொழும்பு, கடவத்தை ஆகிய இடங்களைச் சேர்ந்த நான்குபேரைப் பொலிஸார் கைதுசெய்து காவலில்வைத்துள்ளார்கள். சந்தேகிக்கப்பட்டுள்ள இக்கோஷ்டியினருக்கு தலைமை தாங்கியவர் ஒரு முன்னாள்கலால்இலாகா பரிசோதகர் என அறியப்படுகிறது.


உங்கள் வீட்டுக்கு-

தண்ணீர்ச் சேவை,
மின் காவு குழாய்,
காற்றோட்ட, வடிகால் குழாய்கள்,
மழை நீர்க் குழாய்கள், கீழ்த்
தரைக் குழாய்கள்

ஆகியவற்றுக்கு உறுதியும் நம்பிக்கையும் அதே சமயத்தில் செலவுச் சுருக்கமுமுள்ள எஸ்-லோன் குழாயையும் இணைப்புகளையும் உபயோகித்தால் அதிக பணம் மீதமாகும்.

இவற்றினால் பிற்பாடும் அதிக பணம் மீதமாகும். ஏனென்றால் எஸ்-லோன் கறள், வெப்பம், ரசாயனப் பொருள்கள் ஆகிய வற்றின் தாக்கத்தினை எதிர்த்து நிற்கவல்லது. இதனை பயனுக் அதிக பணஞ் செலவிட்டு மாற்று குழாய்கள் பொருத்த வேண்டிய தேவை இல்லாமற் போகிறது.

எஸ்-லோன் குழாய்கள், இணைப்புகள், வடிகால்கள், கீழ்த்தரைக் குழாய்கள் நிகரற்ற தரச் சிறப்பு மிக்கவை. எவ்வெக்கருமங்களுக்கென தயாரிக்கப்பட்டனவோ அவ்வக் கருமங்களுக்கு அதிகச்சிதமாகப் பயன்படுவன

எஸ் - லோனைப் பார்க்கிலும்
சிறந்ததொன்றை நீங்கள்
குறிப்பிடமுடியாது




எஸ்-லோன்

ராஜேந்திரம்ஸ் லிமிட்டெட்.,
மகாராஜா கட்டிடம், பாங்ஷால் வீதி,
கொழும்பு-11.




எஸ் - லோன் உலகமெங்கும் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துதற்குத் துணை செய்கிறது


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வவனியா மாவட்ட விளையாட்டுப் போட்டிகள்

## இன்றும் நாளையும் நடைபெறுகின்றன

வவனியா, திங்கள் ஆண்டுதோறும் நடைபெற்றுவரும் வவனியா கல்வி மாவட்ட மத்திய மகாவித்தியாலய மகாவித்தியாலய விளையாட்டு, உடற்பயிற்சிப் போட்டிகள் இவ்வருடம் சிறப்பாக நடைபெற ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன. இப்போட்டிகள் செவ்வாய்க்கிழமை 31-ம் திகதியும், புதன்கிழமை 1-ம் திகதியும் நடைபெறுகின்றன.

வவனியா மகாவித்தியாலய மைதானத்தில் செவ்வாய்க்கிழமை காலை ஆரம்பமாகும் இவ்விளையாட்டுப் போட்டிகளில் வவனியா எம். பி. திரு. ரி. சிவசிதம்பரம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார்.

இப்போட்டிகளில் வவனியா மாவட்டத்திலுள்ள சுமார் ஐம்பது பாடசாலைகள் பங்கு பற்றுகின்றன. இதற்கான ஒழுங்குகளை திரு. வி. தங்கராஜா செய்துள்ளார்.

வெற்றிபெறும் வீரர்களுக்கும் வீராங்கனைகளுக்கும் திருமதி ரி. சிவசிதம்பரம் புதன்கிழமை மாலை 5-30க்கு பரிசுகள்வழங்குவார்.


## விளம்பரம்

### அடைவுநகை ஏலவிற்பனை

யாழ்ப்பாணம் 91, கஸ்தூரியார் வீதி சந்திரா அடைவுகடையில் 1-3-62 தொடக்கம் 31-12-64 வரைக்கும் வைத்த அடைவுகளில் மீட்கப்படாதவைகளை 15-6-66 புதன்கிழமை முற்பகல் பத்து மணி தொடக்கம் மேற்படி கடையில் வைத்து பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

வி. செ. குட்டிப்பிள்ளை
411 ஏலவிற்பனவாளர்.

THE JAFFNA ACADEMY
Chundicully

Special Revision Classes for G. C.E. ordinary level August 1966 Examination starts on 1-6-1966. Apply immediately

453 Director.

### தேவை

சேலைகளுக்கு குஞ்சம் (டசல்ஸ்) இணைப்பதற்கு அனுபவமுள்ள பெண்கள் தேவை. நேரில் விண்ணப்பிக்கவும்.

**S. R. S.**
**நெசவு நிலையம்**
212, கே.கே.எஸ். ரோட்,
யாழ்ப்பாணம்.

### நிச்சய வெற்றி

பரீட்சைக்கான வழிகாட்டும் குறிப்புகளுடன் உயர்தரத் தமிழ், அரசியல் புவியியல் இலங்கைச் சரித்திரம், இந்திய சரித்திரம், ஐரோப்பிய சரித்திரம் ஆகியவற்றில் நிச்சயவெற்றி அடையலாம்! ஒவ்வோர் பாடத்திற்கும் ரூபா 10/-

ஐக்கிய கலாசாலை
நெல்லிடி, கரவெட்டி.


யாழ். பட்டின ஆசிரியசங்க

# பேச்சு, சங்கீத தெரிவுப் போட்டி முடிவுகள்


REGAL—JAFFNA
NOW SHOWING!
Michael Gough – Virginia Grey
in
BLACK ZOO
(Bloodcurdling color-Panavision)
(ADULTS ONLY)

**நியூ காலிங்கன்**
(இணுவில்)
தினசரி 6-30, 9-30 மணி
விடுமுறை தினங்களில் 2-30 மணி
சாந்தாராம்—சந்தியா
நடித்த
**ஸ் தீ ரீ** (ஹிந்தி)

**ராஜா**
(யாழ்ப்பாணம்)
தினசரி 2-30, 6-30, 9-30
போயா தினங்களில் 4 காட்சிகள்
**லண்டகா மஹிம**
சிறந்த
சிங்களம் பேசும் படம்


கோண்டாவில், திங்கள் யாழ்ப்பாணம் பட்டின ஆசிரியர் சங்கம் நடாத்திய பேச்சு, சங்கீதம் ஆகியவற்றின் தெரிவுப் போட்டியில் பங்குபற்றிய கல்லூரிகளும் அதன் பெறுபேறுகளும் பின்வருமாறு.

பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) கனிஷ்டபிரிவு:-

எம். வீரசிங்கம் சென்ஜோன்ஸ் கல்லூரி, ஜி சிறிதரன் யாழ். மத்திய கல்லூரி, ஆர் இராசரத்தினம் யாழ். மத்தியகல்லூரி.

பெண்கள்:-

சேளி சபாரத்தினம் சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை, கமலாம்பிகை ஐயாத்துரை சுண்டுக்குளி பெண்கள் பாடசாலை, சி பவானி வேம்படி மகளிர் பாடசாலை.

மத்தியபிரிவு ஆண்கள்:-

வி புவிராஜசிங்கி கனகரத்தினம் மத்தியமகா வித்தியாலயம், ஏ யோகசுந்தரம் சென்ஜோன்ஸ் கல்லூரி, எம் வீரசிங்கம் சென்ஜோன்ஸ் கல்லூரி.

பேச்சுப்போட்டி (தமிழ்) கனிஷ்டபிரி ஆண்கள்:-

ஜெயசீலன் யாழ். மத்திய கல்லூரி, ரி இ—ஞ்சித்குமார் சென்ஜோன்ஸ் கல்லூரி, ரி விவேகானந்தன் கொக்குவில் இந்துக்கல்லூரி.

பெண்கள்:-

நித்தியவதி ஜெயசிங்கம் வேம்படி மகளிர்கல்லூரி, ரஞ்சனுராஜா வேம்படி மகளிர் கல்லூரி, எஸ் ஞானலோஜினி கொக்குவில் இந்துக்கல்லூரி.

மத்தியபிரிவு ஆண்கள்:-

எஸ் நித்தியானந்தன் செங்குந்தா கல்லூரி, ஆர் நாகராஜன் கொ. இ. கல்லூரி

பெண்கள்:-

தயாளகுமாரசாமி சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, ராகினி சபாரத்தினம் சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, தவாம்பிகை சபாரத்தினம் வேம்படி மகளிர் கல்லூரி

பேச்சுப்போட்டி (ஆங்கிலம்) மேற்பிரிவு:-

கே வைத்திலிங்கம் யாழ். இந்துக்கல்லூரி.

பெண்கள்:-

சித்திராணி நிக்கலஸ் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி, சுகந்திரா ஸ்ரானியல் தம்பையா சுண்டுக்குளி மகளிர் பாடசாலை, கமலா ராஜநாயகம் சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

மத்தியபிரிவு பெண்கள்:-

நந்தினி சிவதாசன் வேம்படி மகளிர் கல்லூரி, கனகாம்பிகை குமாரசாமி வேம்படி மகளிர் கல்லூரி, சிவமலர் பொன்னுத்துரை சுண்டுக்குளி மகளிர்கல்லூரி, [illegible] இந்துக்கல்லூரி.

மேற்பிரிவு ஆண்கள்:-

சிறீதரன் யாழ். மத்திய கல்லூரி, என் சச்சிதானந்தன் கொக்குவில் இந்துக் கல்லூரி, சங்கரப்பிள்ளை துரைசிங்கம் கனகரத்தினம் மத்திய மகாவித்தியாலயம்.

மேற்பிரிவு (தமிழ்) பெண்கள் கமலாசினி யாழ். இந்து மகளிர் கல்லூரி, வி இரத்தினேஸ்வரி வேம்படி மகளிர் கல்லூரி, ஆர் நளாயினி சுண்டுக்குளி மகளிர் கல்லூரி.

சங்கீதப்போட்டி (தனிப் பாட்டு) கனிஷ்டபிரிவு: எஸ் மாணிக்கராசா - யாழ் இந்துக்கல்லூரி, ஐ இளங்கோவன் யாழ். மத்திய கல்லூரி, ரி சந்திரமோகன் யாழ்இந்துக்கல்லூரி. பெண்கள்: மாதினி ரத்தினவேல் வேம்படி மகளிர் கல்லூரி, வி சாந்தி கொக்குவில் இந்துக்கல்லூரி, ரி சாந்தகுமாரி கொக்குவில்இந்துக் கல்லூரி.

மேற்பிரிவு என் ரவீந்திரன் யாழ் இந்துக்கல்லூரி, எஸ் சிறீதயாளன் கொக்குவில் இந்துக்கல்லூரி, எ கருணாகரன் யாழ் மத்திய கல்லூரி.

பெண்கள் ரி ஜெகதாம்பிகை யாழ் இந்துமகளிர் கல்லூரி, எஸ் புஷ்பராணி சாவகச்சேரி இந்துக் கல்லூரி.

**கூட்டுப்பாடல்**

கனிஷ்டபிரிவு ஆண்கள் யாழ் மத்தியகல்லூரி, யாழ் இந்துக்கல்லூரி.

பெண்கள் வேம்படி மகளிர் கல்லூரி, யாழ் இந்து மகளிர் கல்லூரி, செங்குந்தா மகளிர்கல்லூரி.

மேற்பிரிவு ஆண்கள் யாழ் மத்தியகல்லூரி. பெண்கள் வேம்படி மகளிர்கல்லூரி, சாவகச்சேரி இந்துக் கல்லூரி

இறுதிப் போட்டிகள் வடமாகாண ஆசிரிய சங்கத்தால் 1-ம் 2-ம் திகதிகளில் யாழ்ப்பாண இந்துக்கல்லூரி மைதானத்தில் நடைபெறும்.


**திங்ஸ்லி** (கொழும்பு) **பிளாஸா** (வெள்ளவத்தை) **நவா** (கும்பனித்தெரு)
**வெலிங்டன்** (யாழ்ப்பாணம்) **விஜயா** (அம்பாறை) **ஸ்ரீகிருஷ்ண** (திருக்கோணமலை)
**விஜிதா** (ஹட்டன்) **கல்யாணி** (நாவலப்பிட்டி) **மொடேர்ன்** (பதுளை)
**தீவொளி** (நுவெரேலியா)



எம். ஜி. ஆர். - சரோஜாதேவி
நம்பியார், அசோகன், நாகேஷ்
பண்டரிபாய், சகஸ்ரநாமம்
மற்றும் பலர் நடித்த
சத்தியாமூவீஸ்
**தெய்வத்தாய்**



## வரி விளம்பரம்

### கல்வி

வகுப்புகள்

விசேட சித்திக்கு- பீ. ஏ; ஜி-ஏ-கியூ; ஜி. சீ. ஈ. உயர்தரம் ஒரு வருடப் பயிற்சி; சாதாரணம் கலை/விஞ்ஞானவியல்கள்; வர்த்தக வகுப்பு தமிழ்/ஆங்கிலம்; சிங்களம்; தாதிகள் பயிற்சிவகுப்பு ஆண்/பெண் ஆகிய வகுப்புகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. யாழ்ப்பாண டியூட்டோரியல் கல்லூரி, கைலாசபிள்ளையார் கோவிலடி, நல்லூர், யாழ்ப்பாணம். வதிரி, கரவெட்டி. 505

வகுப்புகள்

யாழ்ப்பாணக் கல்விநிலையம் யாழ்ப்பாண வைத்தியசாலை வீதியிலுள்ள 304/3 இலக்கக் கட்டிடத்தில் நிறுவப்பட்டுள்ளது. எதிரே வரும் யூன்மாதம் முதலாம் தேதி எல்லா வகுப்புகளும் ஆரம்பமாகும். அவ்வவ் வகுப்புகளுக்குரிய கலை, விஞ்ஞானம் முதலிய எல்லாப் பாடங்களும் தனிமுறையிலும் வகுப்பு முறையிலும் கற்பிக்கப்படும். விஞ்ஞான பாடங்களுக்குரிய செய்கை முறைப் பயிற்சியும் (Practical classes) அளிக்கப்படும். சோ. இளமுருகனர். 506

### வைத்தியம்

**தொய்வு, கசம், நீரிழிவு, கிரந்தி** முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய வுபரங்கள் அடங்கிய கற்ற லோசு இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணனந்தர், கைலாசபிள்ளையார் கேவூரலடி, யாழ்ப்பாணம்.

### தேவை

விற்பனையாளர்

எமது தயாரிப்புகளை ''வேனில்'' சென்று விற்பனை செய்வதற்கு ஒருவர்தேவை. குமார் இன்டஸ்றீஸ் 122, கொழும்புத்துறை கிழக்கு யாழ்ப்பாணம். 504

சீமெண்ட் வெற்றுப்பைகள்

சீமெண்ட் வெற்றுப் பைக்கெற்றுகள் தேவை. மில்க்வைற் தொழிற்சாலை, 527, காங்கேசன்துறைவீதி, யாழ்ப்பாணம். 509

மனேஜர்

யாழ்ப்பாணத்தில் உள்ள விவசாய வர்த்தக ஸ்தாபனம் ஒன்றுக்கு மனேஜர் உடனடியாகத் தேவை. விண்ணப்பதாரர் கல்வி பொதுத்தராதரப் பத்திரமுடையவராகவேனும் அன்றி கனிஷ்ட தராதரப் பத்திரத்துடன் விவசாய பயிற்சி பாடசாலைப் பத்திரத் தகுதியுமுடையவராக இருக்க வேண்டும். வயது 20—35. உடனடியாக, விளம்பர இல: 515, ஈழநாடு மே/பா என எழுத்துமூலம் விண்ணப்பிக்கவும் 515

### வாடகைக்கு

கடை

யாழ்ப்பாணம் காங்கேசன் துறை வீதி, 448-ம் இலக்க கட்டடத்திலுள்ள (யாழ். இந்துக்கல்லூரிக்கு அருகாமையில்) ஒரு கடை வாடகைக்கு உண்டு. நேரில் வரவும். கே. பாலசுப்பிரமணியம், 448, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம். 518

### விற்பனைக்கு

காணி

பெரியவிளான் தெல்லிப்பளை ரோட்டில் பெரிய விளானிலிருந்து 1/2 மைல் தூரத்தில் ரோட்டின் வலதுகரையிலுள்ள வீடு கட்டக்கூடிய கிணற்றுடன் கூடிய காணி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு பொ. யோ. வேதநாயகம், ஒப்பால் கலத் தோட்டம், கம்மடுவ என்ற விலாசத்திற்குத் தொடர்பு கொள்ளவும். 507





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வில்லுக்கத்தியால் குத்தப்பட்டவர் ஸ்தலத்திலேயே மரணம்

## பூநகரியில் சம்பவம்

யாழ்ப்பாணம், செவ்.

பூநகரியைச் சேர்ந்த வில்லடி மட்டுவில்நாடு என்னுமிடத்தில் நேற்று முன்தினம் ஒருவர் 'வில்லு'க்கத்தியால் குத்திக் கொலை செய்யப்பட்டார். நாகலிங்கம் பாலசுப்பிரமணியம் என்பவர் ஸ்தலத்திலேயே மரணமானர்.

யாழ்ப்பாணம் மாஜிஸ்டிரேட் ஸ்தலத்துக்குச் சென்று விசாரணை நடத்தினர். பூநகரி காரியாதிகாரியும் ஸ்தலத்துக்குச் சென்று பார்வையிட்டார். யாழ்ப்பாணம் பொலிஸ் இன்ஸ்பெக்டர் திரு. சௌந்தரநாயகம் ஸ்தலத்திலேயே வழக்கைத் தாக்கல் செய்தார்.

இவ்வழக்குமாஜிஸ்டிரேட் கோர்ட்டில் விசாரிக்கப்படாமல் அடுத்த மாதம் 6-ம் திகதி சுப்ரிம்கோர்ட்டில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

சம்பவம் நடந்த தினத்தன்று சுமார் இரண்டு வாரங்களுக்கு முன்னர் காலஞ் சென்றவரின் தற்போதைய மனைவி, சந்தேகநபரான பீதாம்பரம் கயிலாயபிள்ளைக்குச் சொந்தமான பசுவை வெட்டிக் காயப்படுத்தியதாகவும், கிராமத்தில் உள்ள சமாதான விரும்பிகள் சந்தேகநபருக்கு 15 ரூபா நஷ்டஈடாகக் கொடுக்குமாறு கூறியதாகவும் ஆனல் சம்பவம் நடந்த தினம்வரை அது கொடுக்கப்படவில்லை என்றும் விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் நடந்ததினம் சந்தேகநபர் காலஞ்சென்றவரைச் சந்தித்ததாகவும் அப்பொழுது குறிப்பிட்ட 15 ரூபாவைத் தருமாறு கேட்டதாகவும், காலஞ்சென்றவர் அதைக் கொடுக்கவில்லையென்றும் உடனே சந்தேகநபர் வில்லுக்கத்தியை எடுத்து காலஞ்சென்றவரின் மார்பில் குத்தியதாகவும், அவர் ஸ்தலத்திலேயே மரணமடைந்ததாகவும் தெரியவந்தது.

காலஞ்சென்றவர் இருமுறை திருமணம் செய்தார் என்றும், எதிரியின் மனைவி காலஞ்சென்றவரின் முதல் மனைவியாக இருந்தவர் என்பதும் விசாரணையின்போது தெரியவந்தது. (நநி)

## நுண்கலைக்கழக இசைவிழா

### இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், செவ்.

யாழ்ப்பாணம் நுண்கலைக் கழகத்தின் இசைவிழா, வண்ணை ஸ்ரீ வேங்கடேசவரதராஜப்பெருமாள் கோவில் முன்றலில் அமைக்கப்பெற்றுள்ள பந்தலில் நேற்று ஆரம்பமானது.

விழாவின் இரண்டாவது நாள் நிகழ்ச்சிகள் இன்று மாலை 5 மணிக்கு திரு. எஸ். கணேசன் கோஷ்டியினரின் மேளவாத்திய இசையுடன் ஆரம்பமாகும். நுண்கலைக் கழகத்தின் சங்கீதகலாசாலை மாணவர்களின் வாய்ப்பாட்டை அடுத்து 6-30மணிக்கு சங்கீதபூஷணம் திரு. என். செல்லமுத்துவின் இன்னிசை விருந்தும் 7-30க்கு செல்வி நகுலாம்பிகை, செல்வி கமலாம்பிகை ஆகியோரின் பண்ணிசையும் இடம்பெறும். இரவு 8-30 மணிக்கு செல்வி லீலா கந்தையாவும் 9-15 மணிக்கு நுண்கலைக்கழகத்தின் சங்கீத கலாசாலை மாணவி செல்வி சௌந்தரவல்லிஉமாமகேஸ்வரனும் இரவு 10 மணிக்கு சங்கீதபூஷணம் வி. கே. நடராஜாவும் இன்னிசை விருந்தளிப்பர். இரவு 11-15க்கு திரு. பி. தியாகராசாவின் விகடக்கச்சேரி நடைபெறும்.

# கட்டிய மனைவியை கட்டிவைத்து தீ மூட்டினர்!

அனுராதபுரம், திங்.

ஹிங்குராக்கொடையில் உள்ள ஒரு வீட்டில் சங்கிலியால் பிணைக்கப்பட்டநிலையில், எரிந்து பொசுங்கிய பெண்மணியின் சடலம் ஒன்று காணப்பட்டது.

தேவலகடவெல என்னுமிடத்தைச்சேர்ந்த பட்டுநோனு என்றபெண்மணியை அவரது கணவன் தனதுவீட்டிலுள்ள தளபாடம்ஒன்றில் சங்கிலியால் பிணைத்துக் கட்டிவிட்டு வீட்டுக்குத் தீ வைத்ததாக பொலிஸ் விசாரணையின்போது தெரியவந்தது. குறிப்பிட்ட பெண்மணி ஒரு குழந்தைக்குத் தாய் என்றும் முன்னரும் பலமுறை இப்பெண்மணியை அவரது கணவரான கியாது சங்கிலியால் கட்டிவைத்துச் சாப்பாடுஎதுவும் கொடுக்காமல் கொடுமைப்படுத்தியதாகவும் மேலும் மாவட்டநீதிபதிஸ்தலத்தில் நடத்திய விசாரணையின் போது தெரிவிக்கப்பட்டது.

# தென் வியட்னுமில் மற்றும் இரு தற்கொலைகள்

## இளம் பெண் மணிக்கட்டை துண்டித்தார்

சைகோன், மே 30

தென்வியட்னுமில் அரசாங்கத்தை எதிர்க்கும்வகையில் மேலும் இருவர் இன்று தற்கொலை செய்துகொண்டனர். அதேசமயம் பௌத்தர்களும் தங்கள் எதிர்ப்பைத் தீவிரப்படுத்தியிருக்கிறுர்கள்.

தலாத் பட்டணத்தில் பிக்கு ஒருவர் தீக்குளித்தார். மற்றுெர் இளம்பெண் தமது மணிக்கட்டைத் துண்டித்துக்கொண்டார். பௌத்த இயக்கத்திற்கு இதிலிருந்து வரும் இரத்தத்தைக்கொண்டு ஆதரவுக் கடிதம் எழுதுமாறு கேட்டுக்கொண்ட அப்பெண் உயிர்நீத்ததாக அறிவிக்கப்பட்டது.

பிளேகூ பட்டினத்துக்கு அருகில் வடவியட்னுமின் முறையான பட்டாளத்தை சேதப்படுத்தி விட்டதாக அமெரிக்கர்கள் கூறுகிறுர்கள்.

227 வியட்காங் துருப்புகள் கொல்லப்பட்டதாயும், தங்களைவிட மும்மடங்கு பலங்கொண்ட வியட்காங்கியரைத் தாம் தோற்கடித்து 100 பேரைக் கொன்றதாக தென்வியட்னுமியர் கூறினர்கள். 50 ஆயுதங்கள் கைப்பற்றப்பட்டனவாம்.

இப் பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் [illegible]தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மே[illegible] இல்லத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1966-ம் ஆண்டு மே மாதம் 31ம்திகதி அச்சிட்டுவெளியிடப்பட்டது.

# சுழிபுரம் கிராமசபைத் தேர்தல் முடிவுகள்

சுழிபுரம், திங்கள்

இன்று நடைபெற்ற சுழிபுரம் கிராம சபை தேர்தலில் ஏழு வட்டாரங்களுக்கு அங்கத்தவர்கள் போட்டியின்றி தெரிவுசெய்யப்பட்டனர். மிகுதி ஒன்பது வட்டாரங்களிலும் போட்டி மிகவும் அமைதியான முறையில் நடைபெற்றன. தற்போதைய தலைவர் உட்பட ஆறு அங்கத்தவர்கள் மீண்டும் தெரிவு செய்யப்பட்டனர், போட்டி முடிவுகள் (வாக்கு எண்ணிக்கையுடன்) வருமாறு:-

1-ம் வட்டாரம்- ஏ. ஜே. எம். மயில்வாகனம் 361, எம். சின்னப்பு 202.

2-ம் வட்டாரம்- அ. தையல்பாகர் 250, கே, அரசரத்தினம் 14, எஸ், செல்லன் 11.

3-ம் வட்டாரம்- எஸ். நரசிங்கம் 207, எம். கந்தன் 94, எஸ். ராதாக்கிருஷ்ணன் 06.

4-ம் வட்டாரம்- க. குமாரசாமி (போட்டியில்லை),

5-ம் வட்டாரம்- ப. வயித்தி 165, கே. மாதன் 155, வி. சங்கரப்பிள்ளை 109.

6-ம் வட்டாரம்- பி. விசுவநாதன் (போட்டியில்லை).

7-ம் வட்டாரம்- சு. கந்தசுவாமி 194, மு. கந்தசாமி 60.

8-ம் வட்டாரம்- அ. நன்னித்தம்பி (போட்டியில்லை).

9-ம் வட்டாரம்- சி. நல்லையா (போட்டியில்லை).

10-ம் வட்டாரம்- எஸ். இராசையா 263, எம். அருணசலம் 146.

11-ம வட்டாரம்- அ. நடராசா (போட்டியில்லை).

12-ம்வட்டாரம்- சு. தம்பிநயினர் 279, த. பொன்னுத்துரை 217, வி, மகாலிங்கம் 93.

13-ம் வட்டாரம்- கா, ச. நாராயணபிள்ளை (போட்டியில்லை).

14-ம் வட்டாரம்- சி. பொன்னுச்சாமி (போட்டியில்லை).

15-ம் வட்டாரம்- எம், செல்லத்துரை 87, எஸ். கந்தையா 79, க. கணேசரத்தினம் 44.

16-ம் வட்டாரம்- ரி. தம்பித்துரை 308, மா. இராசையா 180, சு. துரைராசா 18.

## இரதோற்சவம்

யாழ்ப்பாணம், செவ்.

சங்கானை இலுப்பைத்தாள் முருகமூர்த்தி கோயிலில் இன்று தேர்த்திருவிழா நடைபெறும். பிரம்மஸ்ரீ க. சோமாஸ்கந்தக் குருக்கள் விழாவை நடாத்தி வைப்பார்.

## எதிர்க்கட்சி ஆதர

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

○ கூப்பன்களுக்கு வழங்கப்படும் அரிசியை வகுத்துக் கொள்வது. கூப்பன்களை தொழிலாளி, சாதாரணம், குழந்தை என வகுத்து வெவ்வேறு அளவான அரிசி வழங்கல். (இப்பொழுது எல்லாக் கூப்பன்களுக்கும் 2 கொத்து அரிசி வழங்கப்படுகிறது.)

## 'வெடிவெள்ளி' நினைவு விழா

யாழ்ப்பாணம், செவ்.

சமூகத்தொண்டன், உதயதாரகை ஆகிய பத்திரிகைகளின் ஆசிரியராய் கடமையாற்றியவரும், கவிஞரும், எழுத்தாளரும், நல்லூர் சாதனுபாடசாலை தலைமையாரியராய் கடமையாற்றியவருமான திரு. க. பே. முத்தையாவின் இரண்டாவது அமரதினம் இன்று மாலை நல்லூர் சாதனுபாடசாலையில் நடைபெறுகிறது. கருத்தரங்கு, கவியரங்கு நாடக அரங்கு ஆகியன இடம்பெறுகின்றன. கருத்தரங்குக்கு திரு. சா. செல்லையாவும், கவியரங்குக்கு திரு. சொக்கனும், நாடக அரங்குக்கு திரு. தேவனும் தலைமை வகிப்பார்கள்.

யாழ்ப்பாணம், செவ்.

சென்னைப் பச்சையப்பன் கல்லூரி தமிழ்விரிவுரையாளர் சி. பாலசுப்பிரமணியன் எம். ஏ., இன்று வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி, யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி, சைவபரிபாலன சபை, யாழ்ப்பாணம் [illegible] ஆகிய இடங்களில் விரிவுரை நிகழ்த்துவார்.

## நீதிமன்றத்தில் ஆட்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சபை கலைக்கப்பட்டதுசட்ட விரோத, ஒரு தலைப்பட்சமான நடவடிக்கையென்றும் அரசியல் நோக்கம் கொண்டது என்றும் திரு. துரையப்பா வர்ணித்தார். மாநகர சபையில் நிர்வாக ஊழல் இருப்பதாக நிரூபிக்கும்படி ஸ்தலஸ்தாபன மந்திரிக்கு தாம் சவால் விடுவதாக அவர் கூறினர்.

### மந்திரியின் கருத்து

மாநகரசபை கலைக்கப்பட்டது சம்பந்தமாக ஸ்தலஸ்தாபன மந்திரியிடம் கேட்டபொழுது அவர் எதுவித அபிப்பிராயமும் கூறமறுத்துவிட்டார். ஆனல் ''மாநகரசபையைக் கலைக்கும்படி முடிவுசெய்தது அரசாங்கம், அதில் ஒரு மந்திரியாக நான் இருக்கிறேன்'' என்று மட்டும் அவர் கூறினர்.

யாழ்ப்பாணத்திலுள்ள பல சமூக ஸ்தாபனங்களும், பொதுமக்களும் மாநகரசபையின்நிர்வாகம் குறித்து விசாரணை செய்யும்படி அரசாங்கத்தை வற்புறுத்தியதின்பேரிலேயே திடீர் விசாரணை நடத்தப்பட்டதாகவும் அதன்மீது மாநகரசபை கலைக்கப்பட்டதாகவும் அறியப்படுகின்றது.

## பலாலி கொலை

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

சம்பவம் நடந்தஇடத்தில் காலஞ்சென்றவரின் மனைவி நாகம்மாவுடன் கதைக்கவில்லையென்றும், எல்லு பொலை இறந்து கிடந்ததை கண்டதாகவும், கட்டியழும்போது தனது கையில் இரத்தம் பிரண்டதாகவும், குறுக்குவிசாரணையின்போது இளையகுட்டி தெரிவித்தார்.

இரவு 6 மணிமுதல் 10-30 மணிவரை அழுதுகொண்டிருந்ததாகவும், பொலிஸுக்குப் புறப்பட்டுப் போகும்போது இருட்டாக இருந்ததாகவும், எதிரி ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டது தெரியாதென்றும், சம்பவம் நடந்ததினம் வேலுப்பிள்ளை காயமடைந்தது தெரியாதென்றும், இளையகுட்டி மேலும் கூறினர்.

எதிரியின் வழக்கறிஞரும், முடிக்குரிய வழக்கறிஞரும் தங்கள் தொகுப்புரையை முடித்துக் கொண்டார்கள்.

இவ்வழக்கில், 1965-ம் ஆண்டு ஜூன் மாதம் 23-ம் திகதி பலாலியில் நடேசு இராசையா என்பவர், சின்னன் எலுப்பொலையைக் கொலைசெய்ததாகக்குற்றஞ் சாட்டப்பட்டுள்ளது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. சண்முகநாதன், திரு. ஆர். ஜே. செல்வரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜராஞர். எதிரிக்காக அரசாங்கத்தால் திரு தங்கராசா நியமிக்கப்பட்டிருந்தார்.

இன்றுகாலை நீதியரசர் உரை நிகழ்த்திய பின் தீர்ப்பு வழங்கப்படும்.

## உடுப்பிட்டி எம். பி. அமெரிக்கா செல்வார்

கொழும்பு, வெள்ளி

உடுப்பிட்டி எம். பி. திரு. எம். சிவசிதம்பரம் இன்னும் சில நாட்களில் அமெரிக்கா செல்லவிருக்கிருர். ஹாவார்ட் பல்கலைக்கழகம் நடத்தும் கருத்தரங்கொன்றில் கலந்துகொள்வதற்காக இவர் அங்கு செல்லவிருக்கிருர். உலக ஸ்தாபனம் ஒன்றின் சட்ட வல்லுநர் இவரை குறிப்பிட்ட கருத்தரங்கில் கலந்துகொள்ளுமாறு அழைப்பு விடுத்திருந்தார்.

## பாரன் ஜயதிலக்கா சிரார்த்த தினம்

கொழும்பு, திங்கள்

பாரன் ஜயதிலக்காவின் 22-வது சிரார்த்த தினம் நாளை (செவ்வாய்க்கிழமை) நடைபெறவிருக்கின்றது.

பாராளுமன்றக் கட்டடத்திலுள்ள அவரது உருவச்சிலைக்கு சபாநாயகர் சர் அல்பர்ட் எப். பீரிஸும். ராஜாங்கமந்திரி திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனுவும் மலர் மாலைகள் அணிவிப்பார்கள்.

## திருமண அழைப்பு

கணேசலிங்கம் — செல்வநாயகி

நிகழும் 1966-ம் ஆண்டு ஆனி மாதம் 1-ந் திகதி புதன்கிழமை காலை 6-45 மணி தொடக்கம் 8-45 வரை வரும் சுபமுகூர்த்தத்தில் துன்னலை ஸ்ரீ வல்லிபுர ஆழ்வார் விஷ்ணு ஆலயத்தில் திருமணம் செய்யப் பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் அன்பர்களையும் உறவினர்களையும் அன்புடன் அழைக்கின்றேம். தனிப்பட்ட அழைப்புகள் இல்லை. தங்கள் நல்வரவை எதிர்பார்க்கும் தா. வன்னியசிங்கமும் பாரியாரும், (புறக்டர்), பருத்தித்துறை — திருமதி தையல்நாயகி வைத்திலிங்கம், நீராவியடி, யாழ்ப்பாணம். 508

## திருமண அழைப்பு

சண்டிலிப்பாய் இலவச ஆயுள்வேதவைத்தியர் திரு. எஸ். எஸ். ஆறுமுகம் அவர்களின் புதல்வன் செல்வன் ஆ. ஜெகநாதன் (தம்பதனை ஆசிரியருக்கும்) தொல்புரம், பருத்தித்துறையில் கொந்தராத்து வேலை செய்யும் திரு. வை. பரமலிங்கம் அவர்களின் புத்திரி செல்வி தங்கமலருக்கும் பராவ வருடம் வைகாசி மாதம் 19-ந் திகதி (1-6-63) புதன் காலை 7-00 மணி முதல் 8-30 மணி வரையுள்ள சுபநேரத்தில் பருத்தித்துறை சண்டிகா பரமேஸ்வரிஅம்மன் கோவிலில் திருமாங்கல்யதாரணம் செய்ய பெரியோர்கள் நிச்சயித்திருப்பதால் அத்தருணம் உற்றுர், உறவினர், அன்பர், அனுதாபிகள் சுற்றம்சூழவந்து மணமக்களை ஆசிர்வதிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றேம். இங்ஙனம்: மணமகளின் தந்தை வ. பரமலிங்கமும் பாரியாரும், மணமகனின் மைத்துனர் கா. நல்லையாவும் பாரியாரும். 510

அருணோதயாக் கல்லூரி பழைய மாணவர் மன்றம்

## வருடாந்தப் பொதுக்கூட்டம்

மேற்படி கூட்டம் 4-6-66 சனிக்கிழமை பிற்பகல் 3-00 மணியளவில் கல்லூரி மண்டபத்தில் நடைபெறும்

பழைய மாணவர் அனைவரும் அன்புடன் அழைக்கப்படுகின்றனர்.

ஐ. யோகசுந்தரம்,
க. அருளம்பலம்.
இணைக்காரியதரிசிகள்.
அளவெட்டி,
29-5-66. 452

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org